சென்னை, கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (23.08.2023) வணிகவரித் துறை சார்பாக, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், வணிகவரி கூடுதல் ஆணையர்கள் அ.பா. தேவேந்திர பூபதி, மு. பரமேஸ்வரன், திருமதி கு.லதா, ஜி.முகம்மது நௌபல், ஆர்.எல். அருண் பிரசாத், வணிகவரித் துறை உயர்அலுவலர்கள், வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கட்டிடம்!

அமைச்சர் மு. பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

மும்பை, ஆக. 25 - நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் புனரமைக்க ப்பட்ட கட்டிடத்தை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (23.08.2023) புதன் கிழமை திறந்து வைத்து பின் வருமாறு விழாப் பேருரை ஆற்றினார்.

"'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை உணரலாம். உலகின் மூத்த குடியாக விளங்கும் நம் தமிழ்க்குடியினர் தற்போது உலகமெங்கும் பரவி வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தாம் வாழும் நாடுகளில் தமது பிள்ளைகள் தமிழைப் பயில ஊக்குவித்து வருகிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பிள்ளைகள் தாம் எதற்காகத் தமிழ்மொழியைக் கற்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளவும் தமிழ்மொழியைக் கற்பதால் அவர்கள் அடையக் கூடிய நன்மைகள் யாவை? என்பதையும் ஆசிரியர்கள் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். அதற்கான போதிய பயிற்சிகளை ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான பாடப் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் கற்பித்தல் மையங்கள் அமைத்துத் தரவேண்டும்.

நவீன அறிவியல் உலகில் ஒரு மொழி நிலைத்து நிற்க வேண்டுமாயின் அதன் வேர்களில் ஒன்றாக அறிவியல் விளங்குவது அவசியம். இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டாலேயே தமிழ் தொடர்ந்து வாழும் நிலை உருவாகும். நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டு. புலம் பெயர் நாடுகளில் வாழும் இரண்டாம் தலைமுறைத் தமிழ்ப் பிள்ளைகளால் இதற்கு அளப்பரிய பங்களிப்பை நல்க முடியும். அதற்கான வழிகாட்டலை மூத்த தலைமுறையினர் அவர்களுக்கு வழங்குதல் அவசியம்.

எனவே, தமிழ்நாடு அரசு இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் அம்மாநிலங்களில் தமிழ்ப் பண்பாட்டை பரப்பிடும் வகையில் தமிழ் அமைப்பு / தமிழ்ச் சங்கங்கள் நிறுவி செயற்படுத்தி வருபவர்களின் தமிழ் உணர்வை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கோரிக்கையின் அடிப்படையில், நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், மும்பைத் தமிழ்ச் சங்கம், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம், திருவனந்த புரம் தமிழ்ச் சங்கம், பெங்களூர் தமிழ்ச் சங்கம், கருநாடகத் தமிழ் உயர்நிலைப் பள்ளி, ஹுப்ளி, சண்டிகர் தமிழ் மன்றம், கல்கத்தா பாரதித் தமிழ்ச் சங்கம், ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன.

அவ்வகையில், தமிழ் மொழி இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் கலைகள் வளர்த்தல், பிற மொழிகள் கற்பதை ஆதரித்தல், கல்விப்பணிகள் மேற்கொள்ளல், திறமைசாலி களான மாணவர்களுக்குச் சங்க நிதியிலிருந்து அல்லது நன்கொடைகளிலிருந்து கல்வி உதவித் தொகை மற்றும் பரிசுகள் வழங்குதல், நூலகம் அமைத்து, வாசகர்கள் படிக்க வசதிகள் வழங்குதல், அறிவு நலம் பெருக புத்தகம், வார/ இதழ்கள், நாளிதழ்கள் வாங்குதல், நினைவு மலர்கள் அச்சடித்து வெளியிடுதல் மாத, தமிழ் சமூகத்திற்கு தேவைப்படும் நிவாரணப் பணிகளில் பங்களிப்பு வழங்குதல் ஆகியவற்றை தனது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் நவி மும்பை தமிழ்ச் சங்கக்கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கென இதுவரை ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசின் தமிழ்த்தாய் விருது மற்றும் பல்வேறு விருதுகளைப் பெற்ற இந்த நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொள்ள அனுமதியளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள தங்கக் கட்டிகளுக்கு மத்தியில் வைரக் கல்லாக மின்னுகிற தலைவர் தான் நாமெல்லாம் அறிந்த கிருஷ்ணமூர்த்தி. நான் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரை சந்திக்கும் பொழுதெல்லாம் மகிழ்ச்சியாக சொல்லுவேன் கிருஷ்ணமூர்த்தியை நேற்று தான் சென்னையில் பார்த்தேன் என்று, இல்லை ஐயா இன்று அவர் மும்பை சென்றுவிட்டார் என்பார். தமிழ்நாட்டு அரசை சுற்றிச் சுற்றி வந்தே நவி மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு மாபெரும் கட்டடத்தினை கட்டிய பெருமை கிருஷ்ண மூர்த்தி அவர்களையேச் சேரும். அவர் பல்லாண்டு வாழ்க எனவும் நவி மும்பைத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து சிறப்புடன் செயற்பட நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

இந்நிகழ்ச்சியில், மகாராஷ்டிர மாநில மின் உற்பத்தி நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் பொன். அன்பழகன், மகாராஷ்டிர மாநில திறன் வளர்ச்சி நிறுவனத் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் நல். இராமசாமி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு. இரா. செல்வராசு., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் வ.ரெ. போ.கிருஷ்ணமூர்த்தி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

'இண்டியா' அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டத்தில் பங்கேற்க

மும்பை வரும் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு!

கழகத்தினருக்கு - மும்பை புறநகர் செயலாளர் அலி சேக் மீரான் - மாநகரச் செயலாளர் கருவூர் பழனிச்சாமி வேண்டுகோள்!

மும்பை, ஆக. 25 - மும்பையில் நடைபெறும் 'இண்டியா' அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டத்தில் கலந்து கொள்ள ஆகஸ்ட் 31 அன்று மும்பைக்கு வருகை தரும் கழகத்

தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அளிக்கப்படும் எழுச்சிமிகு வரவேற்பில் கழகத்தினரும் தமிழர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு மும்பை புறநகர் மாநிலச் செயலாளர் அலி சேக் மீரான், மும்பை மாநகரச் செயலாளர் கருவூர் பழனிச்சாமி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மராத்திய மாநிலம் மும்பைக்கு வருகிற 31 ஆம் தேதி வியாழக்கிழமை வருகை தருகிறார். அன்று காலை 11 மணியளவில் மும்பை சர்வதேச விமான நிலையம் (சஹார் முனையம் 2) வருகிறார் கழகத் தலைவர்.

31.08.2023 மற்றும் 01.09.2023 ஆகிய இரண்டு நாட்கள் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசின் சீர்கெட்ட ஆட்சிமுறையிலிருந்து நாட்டைக் காக்கவும்; இனம், மதம், மொழிப் பாகுபாடற்ற மனிதநேயம் நிறைந்த நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காகவும், ஒத்த கருத்துகளையுடைய இருபத்தியாறு (26) அரசியல் கட்சிகளை இணைத்து உருவான 'இண்டிகா' (I.N.D.I.A.) அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மும்பைக்கு வருகை புரிகிறார்.

அவ்வேளையில், நமது இயக்கத்தின் தலைவரை; 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை; மும்பை விமான நிலையத்தில் நிர்வாகிகள், துணை மற்றும் கிளை அமைப்புகளின் நிர்வாகிகள், கழகத் தோழமைகள், மும்பைவாழ் தமிழ்மக்கள் புடைசூழ கலந்து கொண்டு வரவேற்று நமது மகிழ்வையும் பேராதரவையும் தெரிவிக்கும்படி மும்பை ,நகர புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.72.22 இலட்சம் மதிப்பீட்டில் சாலைபாளையம் முதல் கோவை ரோடு வரை தார் சாலை புதுப்பித்தல் பணியினை கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், அவிநாசி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஈ.ப.சிவபிரகாஷ் அவினாசி, க.பால்ராஜ் சேவூர், அவினாசி பேரூர் கழகச் செயலாளர் திராவிடன் ந.வசந்தகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்ஐசி அவினாசியப்பன், மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விவேக், உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வாழப்பாடியில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட சேலம் கிழக்கு மாவட்ட தி,மு,க, அலுவலகத்தை கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே .என்.நேரு திறந்து வைத்தார்.பின்னர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையையும் திறந்து வைத்தார்.நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மத்திய மாவட்டச் செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான ஆர்.ராஜேந்திரன், மேற்கு மாவட்டச் செயலாளர் டி .எம்.செல்வ கணபதி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை 100 இடங்களில் கொண்டாடுவோம்!

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

செஞ்சி, ஆக. 25 - விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்களின் அறிமுக கூட்டம் செஞ்சி அடுத்த காந்திநகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ராம சரவணன், குப்புசாமி, குருஜி, கயல்விழி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பிரபு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளரும், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சருக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தும்

முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை நூறு இடங்களில் சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் செஞ்சி மணிவண்ணன், மைலம் உதயவாணன், திண்டிவனம் பாலாஜி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! ஓணம் திருவிழா!

கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு பரிசு - இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு!

பூச்சி எஸ்.முருகன் திறந்து வைக்கிறார்! மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

கேரளா, ஆக. 25 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கேரள மாநிலத்தில் 1000 பேருக்கு ஓணப் பரிசு, இடுக்கி மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழாவில், தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு அலுவலகம் திறந்து கழகக் கொடி ஏற்றி ஓணப்பரிசு வழங்குகிறார் என்று கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் மாதம் 3 ம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது முதல் நிகழ்ச்சியாக கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் 500 க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவச சேலைகளை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது நடைபெற்ற தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா ஊர்வலத்தில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்டச்செயலாளர் பொ.சிவபத்மநாதன், கொல்லம் மாவட்ட செயலாளர் ரெஜிராஜ் உள்ளிட்ட 500 பேர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில தி.மு.க. விவசாய அணி சார்பாக கொல்லம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கேரள மாநில திமுக அமைப்பாளர் முருகேசன் கலந்து கொண்டு விதைகள் இலவசமாக வழங்கினார்.இப்போது கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் குமுளியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா ஆக.27 ஞாயிறு காலை 10 மணிக்கு குமுளி ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் கொண்டாடப்படுகிறது. கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் நடைபெறும் இந்நிலையில் தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர், கழக தலைமைக் கழக செயலாளர் பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்து இடுக்கி மாவட்டக் கழக அலுவலகத்தை திறந்து வைத்து ஒய்.எம்.சி.ஏ. ஹாலில் நடைபெறும் நிகழ்ச்சியில் 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கேரள மாநில பொறுப்புக் குழு உறுப்பினர்கள் மோகன் தாஸ், ஜெயபால், ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் இடுக்கி மாவட்ட வடக்கு செயலாளர் ஜனார்த்தனன் வரவேற்புரை ஆற்றுகிறார் இடுக்கி தெற்கு மாவட்டச் செயலாளர் கனி நன்றி உரை ஆற்றுகிறார். இந்நிகழ்ச்சியின் முன்பாக நடைபெறும் ஊர்வலத்தை கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்சியில் கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மது, விபின் முருகேசன் , பிரவீன் ராஜ், முன்னாள் மேல்புறம் ஒன்றிய செயலாளர் சிற்றார் ரவிச் சந்திரன், ஜோஸ், தங்கச்சன், அம்முக்குட்டி மற்றும் கழக முன்னணியின் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் . இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இடுக்கி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜனார்த்தனன் மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் மது ஆகியோர் செய்து வருகின்றனர்.

நம்மை வழி நடத்திய நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருந்து இப்போதும் வழி நடத்திக் கொண்டு இருக்கும் தங்கத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக கொடியேற்று விழா மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா 1000 பேருக்கு ஓணப்பரிசு வழங்கும் விழா ஆகிய இந்த முப்பெரும் விழா ஊர்வலத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் அனைத்து நிகழ்ச்சியிலும் இடுக்கி மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டம் முழுவதும் உள்ள கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு கேரள மாநில திமுக சார்பாக நடைபெறும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேரள மாநில தி.மு.க. சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 16.08.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. எம்.மஞ்சுளா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.